
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 11 பிப்ரவரி - 1998 இதழ் - 2




வெளியிடுவோர்

**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் :- மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30-11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00-12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30-6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15-8.30 | வேத ஆய்வு வகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00-9.00 | ஜெப ஆராதனை |

## ஆசானின் அறிவுரையிலே


1. நீங்களே தீர்ப்பளியுங்கள் 1
2. இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று நீங்கள் ஏன் விசுவாசிக்க வேண்டும்? 7
3. பெண்கள் பகுதி 10
4. யோவேல் தீர்க்கதரிசன புத்தகம் 16
5. மனிதனுடைய குறித்து தேவனுடைய திட்டம் 17
6. இயேசுவும், சிலுவையும் 22
7. சங்கீதம் 23 25
8. ஆவியின் கனி - தயவு 28
9. தேவனுக்கு கீழ்ப்படிந்தவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள் 31

# THIRUMARAI AASAAN

Editor
S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM - 638 701 Tamilnadu, India.
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 11 FEBRUARY - 1998 Issue -2

முன்னாள் ஆசிரியர் உரை

## நீங்களே தீர்ப்பளியுங்கள்

தற்காலத்தில் செய்தித் தாள்களைத் திறந்தால் முதலில் நம்முடைய கண்களில் படுவது "கட்சியில் பிளவு" கட்சியை உடைக்கக் கோடிக்கணக்கான பணம் கைமாறியது" என்பன போன்ற செய்திகள் தான். இது ஏதோ புதுமை என்று திகைக்காதீர்கள். சாத்தான் நீண்ட நாட்களாகவே இப்போர் முறையை பயன்படுத்தி, இயேசுகிறிஸ்து தம் சொந்த இரத்தத்தைச் சிந்திக் கட்டிய (மத் 16 : 18) தம் சரீரமாகிய சபையை சின்னாபின்னப்படுத்தி மகிழ்ந்து கொண்டிருக்கிறான். அதன் சிறப்பு அம்சம் என்னவென்றால், அவர் பெயரால் இயங்குகின்ற ஸ்தாபனங்களையும், நபர்களையும் கொண்டே இந்தக் கைங்காரியத்தை இலாவகமாகச் செய்து விடுகிறான்.

அநீதத்தின் கூலிக்கு ஆசைப்பட்டு மோசம் போன இந்த நபர்கள் அப்போஸ்தலருடைய உபதேசங்களைத் திரித்தும், சிதைத்தும், நீட்டியும், குறுக்கியும் மக்களுக்கு விநியோகித்து குழப்பமுண்டாக்குகிறார்கள். அவைகளில் சிலவற்றை உங்கள் முன்வைக்கிறோம். நீங்களே தீர்ப்பு கூறுங்கள்.

அற்புத அடையாளங்கள் நடைபெற்றன என்று கூறும் அதே வேதாகமம், அது ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் முடிந்து போயிற்று என்றும் கூறுகிறது. அற்புத அடையாளங்கள் நடைபெற்றன என்று

ஒருவர் விசுவாசிப்பாரானால், அது முடிந்து போயிற்று என்று கூறுவதையும் விசுவாசிக்க வேண்டும் அல்லவா?

தேவன் தம் நோக்கத்தை நிறைவேற்றவும், தேவைப்படும் போதும் அற்புதங்கள் செய்கிறார். நோக்கமும் தேவையும் முடிந்த பின்னர் இயற்கைச் சட்டத்துக்கு அவைகளை ஒப்புக்கொடுத்து விடுகிறார்.

1. தேவன் முதல் மனிதனாகிய ஆதாமை மட்டுமே அற்புதமாகப் படைத்தார். ஆனால் அதற்கு அடுத்து வந்த மனிதர் அனைவருமே இயற்கை விதிகளுக்குட்பட்டே பிறந்து வளர்ந்தனர். உங்களையே எடுத்துக் கொள்ளுங்களேன்! உங்கள் சரீரம் அற்புதமாகப் படைக்கப் பட்டதா? இல்லை தானே! அதேபோல்தான் தேவன் ஒரு காரியத்தின் ஆரம்பத்தில் செய்த அற்புதத்தைத் தொடர்ந்து செய்து கொண்டிராமல் இயற்கை விதிகளுக்கு ஒப்புக்கொடுத்து விடுகிறார்.

2. பரிசுத்த வேதாகமம் அற்புதமாய் எழுதப்பட்டது. பரிசுத்த ஆவியானவர் துணை கொண்டு பரிசுத்த மனிதர்கள் வேதாகமத்தை அற்புதமாய் எழுதினார்கள். (II பேது 1 : 21.) தாங்கள் ஒரு போதும் கற்றறியாத மொழிகளில் பிரசங்கித்தார்கள்; தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். (அப் 2 : 4) ஆனால், பரிசுத்த வேதாகமம் முழுமையாக எழுதப்பட்ட பிறகு அற்புதமான முறைகள் நிறுத்தப்பட்டுவிட்டன. ஏனெனில் தேவன் மனிதர்களுக்கு அளிக்க வேண்டிய அருட்செய்திகள் அனைத்தையும் பரிசுத்த வேதாகமத்தில் பொறிக்கப்பட்ட பிறகு அற்புதமான முறைகள் தேவைப்படவில்லை. (வெளி 22 : 18–19; யாக் 1:25) இப்பொழுது நம்மைப் போன்ற சாதாரண மனிதர்கள் முழுமையாய் எழுதி முடிக்கப்பட்ட வேதாகமத்திலிருந்து தேவனுடைய அருட்செய்திகளை மக்களுக்குப் போதித்து வருகின்றனர்.

ஆனால் ஒரு சிலர், தேவன் தங்களுக்கு புதிய புதிய வெளிப் பாடுகளை கொடுக்கிறார் என்று தங்கள் அபிப்பிராயங்களுக்கு தேவ வாக்கு என்னும் சாயத்தைப் பூசி பாமர மக்களை ஏமாற்றுகின்றனர். ஒருநாள் ஒரு நரிக்குறவர் இனத்தைச் சேர்ந்த ஒரு நண்பர் நரிக்கொம்பு வியாபாரம் செய்து கொண்டு இருந்தார். நரிக்குக் கொம்பு இருக்கிறதா என்பது முதல் கேள்வி. இரண்டாவது இத்தனை கொம்புகள் எப்படிக் கிடைத்தன என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்த வேளையில், அனுபவப்பட்ட (?) ஒருவர் நரிப்பல்லுக்குப் பசை போட்டு சில முடிகளைச் சுற்றிலும் ஒட்டி ஏமாற்றுகிறான் என்று உண்மையை உடைத்தார். அந்த ஆள் அவரை முறைத்துப் பார்த்து விட்டு நைசாக நழுவிவிட்டான். இந்தப் புதிய வெளிப்பாட்டுக்காரர்களைப் பார்த்தால்

அவனுடைய ஞாபகம் தான் வருகிறது. இவைகளையெல்லாம் தெரிந்துதான் தேவன் கூட்டாதே, குறைக்காதே என்றும் (வெளி 22 : 18,19) வானத்திலிருந்து வந்த தூதனாயினும் சரி. அவன் சபிக்கப்பட்டவன் என்று ஒன்றுக்கு இரண்டுமுறை சொல்லுகிறாரே? (கலா 1 : 6-9).

3. வனாந்தர யாத்திரையின் போது, நாற்பது ஆண்டு காலமாக இஸ்ரவேல் மக்கள் மன்னாவை ஆகாரமாகப் புசித்து வந்தார்கள். (யாத் 16 : 35.) ஆனால் அவர்கள் கானான் தேசத்துக்கு வந்து விவசாயம் செய்து முதல் பலனைப் புசிக்கத் துவங்கிய மறுநாளிலே மன்னா பெய்வது நின்றுவிட்டது (யோசுவா 5 : 12) அவர்கள் இயற்கை நியதிக்குட்பட்டு உழைத்து விளைவித்து உண்டனர்.

4. பரிசுத்த ஆவியானவர் இயேசுவின் மேல் வந்த பொழுது புறா வடிவில் வந்தார். (யோவான் 1 : 32-34) அவர் தான் தேவகுமாரன் என்றும் அவரே பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைக் கொடுக்கிறவர் என்றும் யோவான் ஸ்நானகனுக்குத் தெரிவிக்கவும் அது அவ்வாறு நடந்தது என்று வேதாகமம் கூறுகிறது. அந்த நோக்கம் நிறைவேறின பின்பு வேறு எவருக்கும், ஒரு போதும் அப்படிப்பட்ட முறையில் பரிசுத்த ஆவி அருளப்படவில்லை.

பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் மீது இறங்கினதைப் போல என்மீதும் இறங்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது விவேகமாகாது.

அப்போஸ்தலருக்கு மட்டுமே கொடுக்கப்பட்ட சில வாக்குத் தத்தங்கள் எனக்கும் மற்றும் இந்நாட்களில் வாழும் அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தும் என்று வாதிடுவது அறியாமை. அவர்கள் வேதகாமத்தில் உள்ள அனைத்து உண்மைகளை எழுதுவதற்கான கட்டளை பெற்றிருந்தார்கள் (யோவா 16 : 13) அவர்களுக்குக் கட்டுவதற்கான அதிகாரமும் கட்டவிழ்ப்பதற்கான அதிகாரமும் கூட உண்டு. (மத் 18 : 18) தேவன் சபையில் முதலாவதாக அப்போஸ்தலர்களை ஏற்படுத்தினார் (1 கொரி 12 : 28) அப்போஸ்தலர்கள் சபையின் அஸ்திபாரங்கள் (எபே 2 : 20), அப்படி நாம் எல்லோருமே அஸ்திபாரங்களா? இல்லையே. அப்படியிருக்க அப்போஸ்தலருக்குச் சிறப்பாகக் கொடுக்கப்பட்ட சில அதிகாரங்கள் உரிமைகள் எனக்கும் ஏன் இருக்கக்கூடாது என்று வாதிடுவது பொருந்துமா? அக்கினிமயமான நாவுகள் போன்ற நாவுகள் அப்போஸ்தலர்கள் ஒவ்வொருவர் மீதும் அமர்ந்தனவே (அப். 2 : 3). அதை தேவன் அவர்களுக்கு ஒரு நோக்கத்துக்காகக் கொடுத்தார் (மாற்கு 16 : 20) நாம் அதை இச்சித்து, தேவனுக்கு எரிச்சல் உண்டாக்கக்கூடாது.

அப்படியானால் இன்றும் அற்புத அடையாளங்கள் நடக்கிறது என்று கூறுகிறார்களே, அது எப்படி?

**சாத்தான் பொய்யான அற்புதங்களைச் செய்து ஏமாற்றுவான்.**

II தெச 2 : 9 –12ல் சாத்தான் வல்லமையோடும், பொய்யான அற்புதங்களோடும் வருவான் என்று எச்சரிக்கிறது. சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கீகரியாமற் போனபடியால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கும்படிக்கு அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்குள் அனுப்பாவர் என்று கூறுகிறது. மேலும் வெளி 13 : 13–ல் 'அன்றியும் அது மனுஷருக்கு முன்பாக வானத்திலிருந்து பூமியின்மேல் அக்கினியை இறங்கப் பண்ணத்தக்கதாக பெரிய அற்புதங்களை நடப்பிப்பார்கள் என்று கூறுகிறது. மத் 7 : 22ல் கூட இக்கள்ளத் தீர்க்கதரிசிகள், 'உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புத அடையாளங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள் என்றும் அவர்களை ஆண்டவர் **'அக்கிரமச் செய்கைக்காரரே'** என்று பட்டம் சூட்டி விரட்டித் துரத்திவிடுவார் என்றும் வாசிக்கிறோம். II கொரி 11 : 13 – 15 வசனப்பகுதியில் அப்படிப்பட்டவர்களை கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள்; கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக் கொண்டவர்களாயிருக்கிறார்கள். அது ஆச்சரியமல்ல. சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொள்வானே. ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக் கொண்டால் அது ஆச்சரியமல்லவே. அவர்கள் முடிவு அவர்களுடைய கிரியைகளுக்குத் தக்கதாக இருக்கும் என்கிறது.

அப்படியானால், அசலையும் போலியையும் எவ்வாறு அடையாளம் கண்டு கொள்வது? சோதித்துப் பார்த்து தெரிந்து கொள்ளவேண்டும் என்று வேதாகமம் ஆலோசனை கூறுகிறது. I யோவான் 4 : 1ல் பிரியமானவர்களே, உலகத்தில் அநேக கள்ள தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால் நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல் அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று **'சோதித்தறியுங்கள்'** என்று கூறுகிற அறிவுரையின்படி அவர்களைச் சோதித்துப் பார்ப்பதே சிறந்தவழி. ஆறாம் வசனத்தில் அப்போஸ்தலர்கள் தேவனுடையவர்கள் என்றும், தாங்கள் எழுதிவைத்துள்ளவைகள் தேவனுடைய வசனங்கள் என்றும் தேவனை அறிந்தவன் தங்களுக்குச் செவிகொடுக்கிறான். எனவே இதனாலே சத்திய ஆவி

இன்னதென்றும், வஞ்சக ஆவி இன்னதென்றும் அறிந்திருக்கிறோம் என்றும் கூறுகிறது.

தற்காலத்தில் செய்யப்படும் அற்புத அடையாளங்கள் வேதாகம அற்புத அடையாளங்களைப் போல தெளிவும் திட்டமாகவும் இல்லை.

அப்.2 : 6, 8–ல் பேசப்படுகிற அந்நிய மொழிகள் உண்மையாகவே ஒரு குறிப்பிட்ட மொழி என்று தெரிகிறது. அதை பவுலும் உறுதி செய்கிறார் (I கொரி 14 : 10) ஆனால் தற்காலத்தில் அந்நிய பாஷை என்ற பெயரில் தத்துபித்து என்று உளறிக்கொண்டு, ஆவேசம் வந்தவர்கள் போல் உடம்பை அலட்டிக் கொண்டு, கூச்சல் போடுகின்றனர். I கொரி 14:19–ல் அந்நிய பாஷைகளைப் பேசுவதைப் பார்க்கிலும் மற்றவர்களை உணர்த்தும்படி என் கருத்தோடே ஐந்து வார்த்தைகளைப் பேசுவது சிறந்தது என்று பவுல் கூறுகிறார். ஆனால் தற்காலத்தில் அந்நிய பாஷை பேசுகிறோம் என்று சொல்லுபவர்கள் உளறலில் பெருமை பாராட்டுகிறார்கள். I யோவான் 4 : 6–ன்படி அவர்கள் வஞ்சக ஆவியினால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. தயவு செய்து அவர்களுக்காக ஜெபியுங்கள். அவர்களுக்காகவும் கிறிஸ்து மரித்தாரே.

**அதேபோன்று தற்கால தெய்வீக சுகம் என்பதும் வெறும் விளம்பரமே.**

அப் 3 : 2 ல் சொல்லப்பட்டிருக்கிற முடவன், யாராலும் சுகப்படுத்த முடியாத அளவுக்கு பிறவியிலேயே முடவன். அவனைப் பேதுருவும், யோவானும், அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே சுகமாக்கினார்கள். அவனும் நடந்து குதித்துக் குதித்து நடந்து பார்ப்பவர்களை பிரமிக்க வைக்கிறான். தற்காலத்தில் தெய்வீக சுகம் கொடுக்கிறோம் என்று கூறும் நபர்கள் வியாதி இருக்கிறதா? இல்லையா? என்று மக்கள் புரிந்து கொள்ள முடியாத சந்தேகக் கேசுகளைத் தெரிந்து கொண்டு, பழைய ஏற்பாட்டுப் பாகால் தீர்க்கதரிசிகளைப் போல் ஆட்டம் போட்டு, கூச்சல் பண்ணிக் கும்மாளம் அடித்து, ரகளை பண்ணி புறவினத்தார் கிறிஸ்துமேலே கொண்டிருக்கிற கொஞ்சம் நஞ்சம் மரியாதையையும் கெடுத்து வருகிறார்கள். அப்போஸ்தலர்கள் வியாதிகளைச் சுகப்படுத்தின பொழுது எதிரிகள் கூட மறுத்துப் பேசமுடியவில்லை (அப். 4 : 16) என்பதை வாசித்துப் பார்த்து இவர்களை அடையாளம் கண்டு கொள்ளுங்கள்.

மேலும், அப்போஸ்தலர்கள் தங்களிடத்தில் கொண்டு வரப்பட்ட அனைத்து நோயாளிகளையும் சுகப்படுத்தினார்கள். (அப் 5 : 6.) ஆனால் தற்காலத்தில் இந்தப் பேர்வழிகள் கும்பகோணத்தில் கூட்டம் போட்டுக் கோயமுத்தூரில் சுகமடைந்தவர்களைப் பற்றிச் சொல்லுவார்கள்;

சேலத்தில் கூட்டம் போட்டு செங்கல்பட்டில் சுகமடைந்தவர்களின் பட்டியலை வாசிப்பார்கள். பல கூட்டங்களுக்கு வந்து கொண்டேயிருக்கிறேன்; எனக்கு இன்னும் சுகம் கிடைக்கவில்லையே' என்று ஏக்கத்தோடு கேட்கும் ஏழையைப் பார்த்து, "உனக்கு விசுவாசம் இல்லை, அதனால் சுகம் கிடைக்கவில்லை" என்று பழிபோட்டு விடுவார்கள் அல்லது மெல்லத்தான் சுகம் ஆகும் என்று மழுப்புவார்கள். எங்கள் பாஸ்டருக்கு, ஆண்டவர் டெலிபோன் பேசுவார். அது வரையிலும் நீ உபவாசம் இருந்து ஜெபம் பண்ணு; சுகம் கிடைத்தால் எங்கள் பத்திரிகையில் சாட்சி எழுதுவேன் என்று பொருத்தனை பண்ணிக்கொள் என்று பேரம் பேசுவார்கள். பிரேதக்குழியில் கிடந்த லாசருக்கு எந்த விசுவாசம் இருந்தது? என்று கேட்கத் தெரியாத அப்பாவி மக்களிடம் தானே, இவர்கள் வியாபாரம் எல்லாம் (யோவான் 11 : 39–44). நாங்கள் அப்போஸ்தலர்களைவிட ஒன்றும் குறைந்தவர்கள் இல்லை என்று வீராப்புப் பேசும் இந்த நண்பர்கள் அப்போஸ்தலர்களைப் போல மரித்தவர்களை எழுப்புவார்களா? (அப் 20 : 10, 12) கொடிய விஷ ஜந்து தீண்டினாலும் மரிக்காமல் இருப்பார்களா? (அப் 28 : 3 – 6) நீர் மேல் நடப்பார்களா? (மத் 14 : 29) மாட்டார்கள். ஏனெனில் அவர்களால் முடியாது. ஏன் முடியவில்லை? ஏனெனில் அவைகள் என்ன நோக்கத்துக்காகக் கொடுக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறிவிட்டது (மாற்கு 16 : 20) இனிமேல் 20 நூற்றாண்டுக்கு பிறகு இவர்கள் எதை உறுதி செய்ய இப்படி அலட்டிக் கொள்கிறார்களோ தெரியவில்லை. அப்படிப்பட்ட மக்களைக் கண்டால் வெறுத்து ஒதுக்காதீர்கள். அது அவர்களுடைய குற்றமன்று; அந்த பொல்லாத பிசாசு – தேவனுக்கும் மனுஷனுக்கும் சத்துரு, அவர்களுடைய கருத்தைக் குருடாக்கிவிட்டான். II கொரி 4 : 4) அவர்களுக்கு பிரகாசமான மனக்கண்களைக் கொடுக்கும்படி பிதாவினிடம் வேண்டிக் கொள்ளுங்கள் (எபே 1 : 19).

**E.Z. *செல்வநாயகம்***

*"திருமறை ஆசான்" இதழின் நிறுவன ஆசிரியர் சகோ. E.Z.செல்வநாயகம் அவர்கள் பரம இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்து 9.2.98-உடன் ஐந்து ஆண்டுகள் நிறைவடைகிறது. அவர் நினைவாக இம்மாதம் அவர் எழுதின ஆசிரியர் உரை வெளியிடப்படுகிறது.*

**ஆசிரியர்**

# இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று நீங்கள் ஏன் விசுவாசிக்க வேண்டும்?

நீங்கள் இயேசுக்கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று விசுவாசியாதவராயின் இப்பாடம் அதற்கு வழிகாட்டுகிறது. இயேசு கிறிஸ்து மனிதனுக்கும் தீர்க்கதரிசிக்கும் மேலானவர் என்பதை நிரூபிக்க அநேக சாட்சியங்களை கொடுக்கலாம். அவர் தேவனுடைய குமாரன் என்பதை ஒவ்வொரு வார்த்தையிலும் குறிப்பிட்டாலும், அவரை இப்படியாக ஏன் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்கு ஏராளமான காரணங்களை காணலாம்.

1. இயேசு ஆதியிலே தேவனோடிருந்தார். ஆதி 1 : 26-ல் "பின்பு தேவன் நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக" என்று வாசிக்கிறோம். யோவான் 1 : 1-ல், "ஆதியிலே வார்த்தையிருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது" என்று சொல்லப்படுகிறது. தொடர்ந்து இது கிறிஸ்துவைக் குறிப்பதாக கூறுகிறார் எனக் காணலாம்.

2. இயேசுவைக் குறித்து தீர்க்கதரிசனமாக கூறப்பட்டது. ஏசா 53-ல், கிறிஸ்துவைக் குறித்தும், அவருடைய வருகையைக் குறித்தும் தீர்க்கதரிசி கூறுகிறார். பிறகு அப். 8 : 32 – 35ல் எத்தியோப்பிய மந்திரி ஏசாயா 53-ஐ வாசிப்பதாக பிலிப்பு கண்டு, அதே வசனப்பகுதியை அவனுக்கு பிரசங்கிக்கிறார். ஏசாயா இயேசுவைக் குறித்த தீர்க்கதரிசனம் உரைத்ததை இது காட்டுகிறது. இது போன்று வேறு அநேக தீர்க்கதரிசனங்கள் பழைய ஏற்பாட்டில் உண்டு.

3. இயேசு கன்னிகையினிடத்தில் பிறந்தார். இயேசுவுக்கு உலகப் பிரகாரமான தகப்பன் இல்லை என்பது இதன் பொருள். தமது பரம தகப்பனை (பிதாவை) விட்டு, மனுஷனுக்கு ஒப்பாக தம்மைத்தாமே தாழ்த்தி, கன்னிகையினிடத்தில் அற்புதவிதமாக கிறிஸ்து பிறந்தார், இதுவும் அவரைக் குறித்து கூறப்பட்ட தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாகும். (மத்தேயு 1 : 18-25; ஏசாயா 7 : 14).

4. இயேசு ஒரு பூரண சற்குணராயிருந்தார். அவர் மாத்திரமே பூரண சற்குணரான அல்லது பாவமற்றவராக வாழ்ந்து காட்டியவர். அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றும்படி பேதுரு குறிப்பிட்டார். "அவர் பாவஞ் செய்யவுமில்லை, அவருடைய வாயில் வஞ்சனை காணப்படவுமில்லை." (I பேதுரு 2 : 22). அவர் பாவமில்லாதவராயிருந்தமையால் தான் பாவிகளுக்காக அவர் மரிக்க முடிந்தது, இப்படியாக உலகிற்கு நம்பிக்கையை கொண்டுவந்தார். (I யோவா 3 : 5).

5. இயேசு தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றும்படி வந்தார். "நியாயப் பிரமாணத்தையானாலும், தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிற தற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள், அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்." (மத்தேயு 5 : 17).

6. இயேசு அநேக அற்புதங்களைச் செய்தார். வியாதியஸ்தர்களை சுகமாக்கினார். செவிடர்களை கேட்கச் செய்தார், ஊமையர்களைப் பேச வைத்தார், முடவர்களை நடக்க வைத்தார், மரித்தவர்களை உயிரோடெழுப்பினார். சகலவிதமான வியாதிகளையும் சுகப்படுத் தினார், திரளானவர்களை போஷித்தார், தண்ணீர் மேல் நடந்தார். "அவர் செய்த அற்புதங்களைக் கண்டு அநேகர் அவருடைய நாமத்திலே விசுவாசம் வைத்தனர்." (யோவான் 2 : 23).

7. தமது சீஷர்களால் இயேசு தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்யப்பட்டார். பேதுரு, "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று சொன்னார். (மத்தேயு 16 : 16).

8. பிசாசுகளும் இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டன. "பிசாசுகளும் : நீர் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று சத்தமிட்டு, அநேகரை விட்டு புறப்பட்டது. அவரைக் கிறிஸ்து என்று பிசாசுகள் அறிந்திருந்தபடியால் அவர் அவைகளை பேசவொட்டாமல் அதட்டினார்." (லூக்கா 4 : 41).

9. மற்றவர்கள் இயேசுவை தேவனுடைய குமாரனென்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். "பிதாவினால் பரிசுத்தமாக்கப்பட்டும், உலகத்தில் அனுப்பப்பட்டும் இருக்கிற நான் தேவனுடைய குமாரனென்று சொன்னதினாலே தேவதூஷணம் சொன்னாய் என்று நீங்கள் சொல்லலாமா?" (யோவா 10 : 36).

10. இயேசு தாமே தேவனுடைய குமாரனென்று சொன்னார். தாம் தேவனுடைய குமாரனென்று மகிமைப்படும்படி அவர் லாசருவை மரித்தோரிலிருந்து எழுப்பினார். (யோவா 11 : 4).

11. தேவன் இயேசுவை தமது குமாரன் என்று அறிக்கையிட்டார். "இவர் என்னுடைய நேசக் குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவி கொடுங்கள்" என்றார் (மத்தேயு 17 : 5).

12. இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார். பவுல், ". . . பரிசுத்த ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார். (ரோமர். 1 : 5).

13. இயேசு தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கு ஜீவனை கொடுக்க இயலும். "நீங்கள் இயேசுவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கின்றன." (யோவான் 20 : 31).

14. இயேசு மறுபடியும் வருகிறார். "நான் மறுபடியும் வருகிறேன்" (யோவான் 14 : 3).

15. இயேசு வரலாற்றிலே தேவனுடைய குமாரனென்று அறிக்கையிடப்பட்டிருக்கிறார்.

16. இயேசு இப்பொழுது உயிரோடிருக்கிறார். அவர் என்றென்றும் உயிரோடிப்பார்.

வேதத்திலேயும் வேதத்திற்குப் புறம்பேயும் காணப்படுகின்ற மேலும் ஏராளமான சாட்சியங்களை காண இடம் போதாது. ஆனால் மேலே குறிப்பிடப்பட்டவைகளை நீங்கள் சிந்திக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இயேசுவை தேவனுடைய குமாரனென்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அப்படியாயின் அவ்ரை அறிக்கை செய்து, (மத்தேயு 10 : 32), அவருக்கு கீழ்படிந்து, அவரை உங்கள் இரட்சகராகவும் அவர் மூலமாய், நித்திய ஜீவனுக்குரிய நம்பிக்கையை நீங்கள் பெற்றுக்கொள்ளும்படியாகவும் கேட்கிறோம். (அப்போஸ்தலர் 2 : 38; மாற்கு 16 : 16; கொலோசேயர் 1 : 27).

**J.C. சோட்.**

## பெண்கள் பகுதி

# பெண்கள் மூப்பராகவோ, உதவிக்காரராகவோ வர முடியுமா?

மாறுகின்ற இந்த உலகத்தில், பெண்கள் தங்கள் உரிமைக்காக அதிகம் குரல் கொடுத்து, ஆண்கள் மாத்திரமே செய்ய அனுமதிக்கப்பட்ட காரியங்களை செய்ய முற்படுகின்றனர். மத உலகமும் இதற்கு விதிவிலக்கல்ல. சபையின் தலைமைப் பொறுப்பில் உள்ள தங்கள் கணவன்மார்களை இதைச் செய்யுங்கள் என்றும், அதைச் செய்யக் கூடாதென்றும் பெண்கள் அடிக்கடி சொல்லி, கணவர்களின் முதுகுக்குப் பின்னால் செயல்பட்டு, உண்மையில் தாங்கள் தலைமையாளர்களாக உள்ளனர். பெண்களை வழி நடத்தும் படியான பொறுப்பை தேவன் ஆண்களுக்குக் கொடுத்துள்ளார் என்று முந்தின பாடத்தில் படித்தோம். ஆண்கள், சரியானவர்களாக இருந்து, தங்கள் வேலையை ஒழுங்காகச் செய்தால் தேவன் அதிலே பிரியப்படுவார். ஆனால், ஆண்கள் பெலவீனமுள்ளவர்களாயிருந்து தங்கள் தலைமைத்துவ பொறுப்பைத் தட்டிக் கழித்து, பெண்கள் தங்களை, "ஆட்டிப் படைக்க" அனுமதிப்பது, தேவன் இவர்களின் இந்நிலையை அங்கீகரிக்கிறார் என்று பொருள் ஆகாது. பெண்கள் மறைமுகமாக என்ன "பன்னாட்டுப்" பண்ணினாலும், தேவனுடைய பார்வையில் ஆண்கள் தான் அவைகளுக்கு பொறுப்பாளிகள்.

பெண்கள் சபையில் பேசக் கூடாது என்பதையும், ஆண்கள் மீது அதிகாரம் செலுத்த அவர்களுக்கு அதிகார மில்லையென்பதையும் தேவன், பவுலைக் கொண்டு சொல்லியிருப்பதால், சில நேரங்களில் விமர்சகர்கள் பவுலைக் குற்றப்படுத்துவதுண்டு (I தீமோத் : 2 : 12, I கொரி : 14 : 34, 35). பவுல் திருமணமாகாதவராக இருந்தபடியால், பெண்கள் மீது இருந்த வெறுப்பின் காரணமாக இப்படிச் சொல்லியிருப்பார் என்று சொல்லி, சிலர் கேலிக்கு தீனி போடுவர். ஆனால், வேதாகமத்தின் மற்ற எல்லா எழுத்தாளர்களைப் போலவே, பவுலும் தேவ ஆவியினால் ஏவப்பட்டே எழுதினார். தன்னுடைய விருப்பு, வெறுப்பினடிப்படையில் அவர் எதையும் எழுதவில்லை.

IIதீமோத் : 3 : 16, 17 இப்படிச் சொல்கிறது. "வேதவாக்கியங் களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவ னுடைய மனுஷன் தேறினவனா கவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத் தலுக்கும், நீதியைப் படிப்பிக்கு தலுக்கும் பிரயோஜனமுள்ளவை களாயிருக்கிறது.

நாம் மனந்திறந்து பார்க்க விரும்பினால், தலைமைத் துவத்தைக் குறித்தான் தேவ சட்டம் என்ன என்பதைப் புரிந்து கொள்வது மிகவும் சுலபம். பழைய, புதிய ஏற்பாட்டை தோராயமாக 40 எழுத்தாளர்கள் எழுதினார்கள். அவர்களில் ஒருவர் கூட பெண் இல்லை. யாக்கோபுக்கு 12 குமாரர்களும் ஒரு குமாரத்தியும் இருந்தார்கள். ஆனால், அவர் களைக் கொண்டு உருவான இஸ்ரவேல் தேசத்தைப் பற்றி வேதாகமம் சொல்லும்போது, யாக்கோபின் 12 குமாரர்கள் பெயரால்தான் கோத்திரங்கள் அழைக்கப்படு கிறது. குமாரத்தியின் பெயரில் இல்லை. எண்ணற்ற முற்பிதாக் கள், ஆசாரியர்கள், நியாயாதி பதிகள், ராஜாக்கள் என்று தலைமையேற்று நடத்தும் படி தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஆண்களைப் பார்க்கிறோம். எல்லோருமே ஆண்கள் தான். விதிவிலக்காக தெபோராள் என்று சொல்லக் கூடிய பெண் நியாயாதிபதி இஸ்ரவேலில் இருந்தாள். (நியாயா : 4 : 1 – 9). ஏனெனில், இஸ்ரவேல் தேவனு டைய பார்வையில், பொல்லாங் கிற்குள் விழுந்து, தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் தைரியமும், விசுவாசமும் உள்ள ஆண் ஒருவருமில்லை. ஒன்ப தாம் வசனத்தில் சொல்லியுள்ள படி இது ஆண் இனத்திற்கே அவமானமாகும்.

சபையானது சில இடங்களில், சில பெண்களுடைய வீட்டில் கூடிவந்தது உண்மை யாக இருப்பினும், புதிய ஏற்பாட்டிலே பிரசங்கிகளாகவும், தலைவர்களாகவும் ஆண்கள் தான் குறிப்பிடப்பட்டுள்ளார்கள். இயேசுவோடிருந்த சில பெண் களுக்கு அப்போஸ்தலர்களைக் காட்டிலும் அதிக விசுவாசமிருந் திருந்தாலும், அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட 12 அப்போஸ் தலர்களும் ஆண்களாகவே இருந்துள்ளார்கள். (லூக் : 24 : 10, 11). இதிலிருந்து ஆண்கள், குடும்பத்திலும், சபையிலும் தலைவர்களாக இருக்கும்படி தெரிந்து கொள்ளப்பட்டது, அவர்கள் அறிவும், திறமையும், விசுவாசமும் உள்ளவர்களாக இருப்பதால் அல்ல என்று தெரிந்து கொள்ளலாம். தேவன் சிருஷ்டிப்பில் மனிதனை

முதலாவது படைத்தபடியாலும், அதிகாரம் செய்யும்படியாக தேவன் அவனை ஏற்படுத்தி யிருப்பதாலும் இப்படி உள்ளது. தன்னுடைய திறமை முழுவதை யும் பயன்படுத்தி தன்னை தயார் படுத்துவதோடல்லாமல், மற்றவர் களையும் வழிநடத்தும்படியான பொறுப்பை தேவனிடமிருந்து பெற்றுக் கொள்கிறான்.

கிறிஸ்துவின் சபையானது, தனித்தனி அமைப்பாக இருந்து ஒன்றையொன்று சாராமல், தகுதி வாய்ந்த மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களைக் கொண்டு வழிநடத்தப்பட வேண்டுமென்று புதிய ஏற்பாடு போதிக்கிறது. (அப் : 14 : 23, பிலி : 1 : 1, தீத் : 1 : 5) இந்தப் பொறுப்பை வகிக்கிற ஆண்களுக்கு எப்படிப்பட்ட தகுதிகள் இருந்தது என்பதும் கொடுக்கப்பட்டுள்ளது. (I தீமோ 3 : 2 – 13, தீத்து : 1 : 5–9).

(I தீமோத் : 3 : 2 –7). "ஆகையால் கண்காணியான வன் குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனும், ஜாக்கிரதையுள்ள வனும், தெளிந்த புத்தியுள்ள வனும், யோக்கியதையுள்ள வனும். அந்நியரை உபசரிக்கிற வனும், போதகசமர்த்தனுமாய் இருக்க வேண்டும். அவன் மதுபானப் பிரியனும், அடிக்கிற வனும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாயிராமல், பொறுமையுள்ளவனும், சண்டை பண்ணாதவனும், பண ஆசை யில்லாதவனுமாயிருந்து, தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளை களைச் சகல நல்லொழுக்கமுள்ள வர்களாகக் கீழ்ப்படியப் பண்ணு கிறவனுமாயிருக்க வேண்டும். ஒருவன் தன் சொந்தக் குடும் பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்? அவன் இறுமாப் படைந்து, பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு நூதன சீஷனாயிருக்கக் கூடாது. அவன் நிந்தனையிலும், பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு, புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனாயுமிருக்க வேண்டும்.

தீத்துவுக்கு எழுதின நிருபம் முதலாம் அதிகாரம் 5 முதல் 9 வசனப் பகுதிகளை வாசிக்கும் போது, "நீ குறைவாயிருக் கிறவைகளை ஒழுங்குபடுத்தும் படிக்கும், நான் உனக்கு கட்டளை யிட்டபடியே, பட்டணங்கள் தோறும் மூப்பரை ஏற்படுத்தும் படிக்கும், உன்னைக் கிரேத்தா தீவிலே விட்டு வந்தேனே.

குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியையுடைய புருஷனும், துன்மார்க்கரென்றும், அடங்காதவர்களென்றும் பேரெடுக்காத விசுவாசமுள்ள பிள்ளைகளை உடையவனுமாகிய ஒருவனிருந்தால் அவனையே ஏற்படுத்தலாம்.

ஏனெனில், கண்காணியானவன் தேவனுடைய உக்கிராணக்காரனுக்கேற்றவிதமாய், குற்றஞ்சாட்டப்படாதவனும், தன் இஷ்டப்படி செய்யாதவனும், முற்கோபமில்லாதவனும், மதுபானப் பிரியமில்லாதவனும், அடியாதவனும், இழிவான ஆதாயத்தை இச்சியாதவனும்,

அந்நியரை உபசரிக்கிறனும், நல்லோர்மேல் பிரியமுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், நீதிமானும், பரிசுத்தவானும், இச்சையடக்கமுள்ளவனும்,

ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்தி சொல்லவும், எதிர் பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும் வல்லவனுமாயிருக்கும்படி, தான் போதிக்கப்பட்டதற்கேற்ற உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக்கொள்ளுகிறவனுமாயிருக்க வேண்டும்.

இங்கே மூப்பர்களை ஏற்படுத்தும்படியாய் கொடுக்கப்பட்ட வழிமுறைகள், காரியங்களைக் காட்டுகிறது.

1. ஒவ்வொரு இடத்திலும், அந்தந்த பிராந்திய சபையைச் சேர்ந்த மூப்பர்கள் இருக்க வேண்டும். பன்மையில் சொல்லப்பட்டுள்ளது.

2. மூப்பர் என்பவன், "ஒரே மனைவியையுடைய புருஷனும் . . . . . . தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப் பண்ணுகிறவனுமாயிருக்க வேண்டும். ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்? (I தீமோத் : 3 : 2, 4, 5). மூப்பராக இருக்க விரும்புகிற ஒருவன் இரண்டு மனைவியை உடையவனாகவோ, பலதாரமுடையவனாகவோ, விவாகரத்தடைந்தவனாகவோ இருக்க முடியாது. ஒரே மனைவிதான் இருக்க வேண்டும். சரீரப் பிரகாரமான குழந்தைகளாக இருந்தாலும், ஆவிக்குரிய குழந்தைகளாக இருந்தாலும், அவர்கள் ஒரு பூரணத்தை அடைகின்ற அளவில் அவர்களை வழிநடத்தும்படியாய், வசனத்தில் சொல்லியுள்ளபடி, முதலாவது தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனாய் இருக்க வேண்டும். தன் சொந்தக் குடும்பத்தை தலைமையேற்று பல ஆண்டுகளாய் வழி நடத்திய அனுபவத்தைக் கொண்டு அவன் சக மூப்பர்களோடு இணைந்து பணியாற்றி கர்த்தருடைய சபைக்கு ஒரு நல்ல தலைமையைக் கொடுக்க முடியும் என எதிர்பார்க்கலாம்.

ஒரு பெண், "ஒரே மனைவியை உடைய புருஷனா

இருக்க முடியாது" என்பது வெளிப்படை. அவள் தன் குடும்பத்திற்கு தலைமையேற்று நடத்திக் கொண்டும், புருஷன்மீது அதிகாரம் செலுத்திக் கொண்டும், தேவனுக்குப் பிரியமானவளாக நடக்க முடியாது. ஆகவே, அவள் ஒரு மூப்பனாக இருக்கத் தகுதியற்றவளாகிறாள்.

(I தீமோத்தேயு : 3 : 8 – 13) வசனங்களில், "அந்தப்படியே உதவிக்காரரும், இருநாக்குள்ளவர்களாயும், மதுபானப் பிரியராயும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாயும் இராமல், நல்லொழுக்கமுள்ளவர்களாயும், விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்த மனச்சாட்சியிலே காத்துக் கொள்ளுகிறவர்களாயும் இருக்க வேண்டும்.

மேலும், இவர்கள் முன்னதாகச் சோதிக்கப்பட வேண்டும். குற்றஞ்சாட்டப்படாதவர்களானால் உதவிக்காரராக ஊழியஞ் செய்ய லாம். அந்தப்படியே ஸ்திரீ களும் நல்லொழுக்கமுள்ளவர்களும், அவதூறு பண்ணாதவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர் களும், எல்லாவற்றிலேயும் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

மேலும் உதவிக்காரனர்கள் ஒரே மனைவியையுடைய புருஷருமாய், தங்கள் பிள்ளைகளையும், சொந்தக் குடும்பங்களையும் நன்றாய் நடத்துகிறவர்களுமாயிருக்க வேண்டும்.

இப்படி உதவிக்காரருடைய ஊழியத்தை நன்றாய்ச் செய்கிறவர்கள் தங்களுக்கு நல்ல நிலைமையும், கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தில் மிகுந்த தைரியத்தையும் அடைவார்கள்'' என்று எழுதப்பட்டிருக்கிறது.

உதவிக்காரர்கள், தங்கள் பொறுப்பின்படியாக, மூப்பர்களுக்கு கீழாக இருந்து ஊழியம் செய்ய வேண்டும். "உதவிக்காரர்" என்ற வார்த்தை யின் பொருள் அதுதான். இன்றைக்கு பல பிரிவினைச் சபைகளிலே "மூப்பர்கள் என்ற பொறுப்பில் யாரும் இருக்க மாட்டார்கள். ஆனால் "உதவிக்காரர்கள்" மூப்பர்களின் வேலையைச் செய்து கொண்டிருப்பார்கள். வேதாகமம் அங்கீகரிக்காத "பாஸ்டர்" என்ற பட்டத்தோடு அங்கிருப்பவர் ஒரு சுவிசேஷகன் அல்லது பிரசங்கியினுடைய வேலையைச் செய்து கொண்டிருப்பார். (பாஸ்டர் என்பது புதிய ஏற்பாட்டில் மூப்பர்களுக்கு கொடுக்கப்பட்ட இன்னொரு பெயர்).

சபையிலே இருக்க வேண்டுமென கர்த்தர் கொடுத்த பொறுப்புகளை தாறுமாறாக்குவது வேதத்துக்குப் புறம்பானது. தாம் தேவனுடைய அதிகாரத்திற்கு நம்மை உட்படுத்தி, அவர் தமது வசனத்தில் என்ன சொல்லியிருக்கிறார் என்பதை ஜாக்கிரதையாய்

கவனிக்க வேண்டும். ஒவ்வொரு பிராந்திய சபையிலும் மூப்பர்களும், உதவிக்காரர்களும் இருக்க வேண்டுமென்று சொல்லியுள்ளார். இரண்டு வேலைகளுக்குமான தகுதியாம் சங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அப்பொறுப்புக்கு அவர்களை ஏற்படுத்துமுன் அவர்கள் அத்தகுதியுடையவர்களாக இருக்கிறார்களா? என்று பார்க்க வேண்டும்.

மூப்பர்களைப் போலவே, உதவிக்காரர்களும், ஒரே மனைவியுடைய புருஷர்களாக இருக்க வேண்டும். (1தீமோத் : 3 : 12). ஆகவே, பெண்கள் உதவிக்காரர்களாக இருக்க முடியாதென்பது திட்டமாகத் தெரிகிறது.

நாம் இவ்வாறு சொல்லும்போது, சிலர் 11-ம் வசனத்தை மேற்கோள்காட்டி பெண்களும் உதவிக்காரர்களாக இருக்கலாம் என்று சொல்வார்கள். ஆனால், கவனித்துப் படித்தால் அந்தப் பகுதி, சபையிலே தலைமையாளர்களாக இருப்பவர்களின் மனைவிகளுடைய தேவ பக்தியைக் குறித்துப் பேசுகிறது என அறியலாம். உதவிக்காரராக ஏற்படுத்தப்பட்ட பெண்ணைப் பற்றி அங்கே பேசவில்லை. எல்லாக் கிறிஸ்தவர்களும், ஊழியக்காரர்களாக இருந்து, ஊழியம் செய்ய வேண்டுமென்பது ஒரு வகையில் சரிதான். கர்த்தருடைய சபையில், மற்றவர்களுக்கு உதவி செய்து, சபையை வளர்ச்சியடையச் செய்யும் பணியில், ஒரு பெண் செய்வதற்கு நிறைய வேலைகள் உண்டு. இப்படிச் செய்வதற்கு அவர்கள் ஊக்கப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால் இதை அடிப்படையாக வைத்து, ஒரு பெண்ணை மூப்பராகவோ, அல்லது உதவிக்காரராகவோ எந்தவொரு கூட்டமாகிலும் ஏற்படுத்தி, கர்த்தருடைய சபையின் மீது அதிகாரம் செலுத்தும் பொறுப்பைக் கொடுத்தால், அது எளிமையாகவும், தெளிவாகவும் கொடுக்கப்பட்டுள்ள வேதவசனங்களை நேரிடையாக மீறும் செயலாகும். இப்படிச் செய்வது, வேத வசனத்தோடு ஒன்றைக் கூட்டுகிற காரியமாகும். இது, பாவம். இப்படிச் செய்யக்கூடாதென்று தேவன் கண்டிப்பாக தனது வசனங்களில் சொல்லியுள்ளார். (வெளி : 22 : 18, 19, உபா : 4 : 21, நீதி 30 : 6).

# யோவேல் தீர்க்கதரிசன புத்தகம்

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | யோவேல் தீர்க்கதரிசி. |
| பெயரின் பொருள் | : | யெகோவா தேவன் |
| காலம் | : | கி.மு. 800 |
| யாருக்கு? | : | தெற்கு இராஜ்ஜியமாகிய யூதாவுக்கு. |
| விவாதப் பொருள் | : | வெட்டுக் கிளிகளின் உவமை. |
| சிறப்பு | : | பெந்தெகொஸ்தே தீர்க்கதரிசி. |

**புறக் குறிப்பு**

| | | |
|---|---|---|
| I | மனந்திரும்புவதற்கான வேண்டுகோள் | 1 : 1 - 2 :11 அதி. |
| II | மனந்திரும்புவதற்கான திட்டம் | 2 : 12-17 |
| III | மனந்திரும்புவதற்கான நோக்கம் | 2 : 18 - 3 : 21 |

**இது தரும் பாடங்கள்**

1. ஒரு தேசத்தை மனந்திரும்பச் செய்ய, தேவன் இயற்கையின் மூலம் அழிவை ஏற்படுத்துகிறார்.
2. அக்கிரமத்தில் நடக்கும் தேசங்களின் மீதான நியாயத் தீர்ப்பு தவிர்க்க முடியாதது. எப்பொழுது என்பது தான் கேள்வி.
3. தேவனோடு ஒருவன் கொண்டிருக்கும் உறவைப் பொறுத்து, தேவனுடைய நியாயத்தீர்ப்பு நாள் பயங்கர நாளாக இருக்கும் அல்லது ஆசீர்வாதத்தின் நாளாக இருக்கும்.
4. தேவ சித்தத்தை நாம் பகிரங்கமாக மீறினால் நம்முடைய சுதந்திரம் நம்மோடிருக்காது.
5. பாவத்திலிருக்கும் ஒவ்வொருவரும் மனந்திரும்ப வேண்டும். மனந்திரும்புதல் அழிவுக்குப் பதிலாக ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும்.

EZSR

# மனிதனை குறித்து தேவனுடைய திட்டம்

இந்த பாடத்தில் தொடங்கி, “நீங்கள் இருக்கும் இடத்தில் கிறிஸ்துவின் சபையை தொடங்குவது எப்படி? ” என்ற தலைப்பை நாம் ஆராயப் போகிறோம். வேதாகமம் போதிக்கின்ற பல உண்மைகளை பற்றி நாம் பார்க்க உள்ளோம். இது கர்த்தருடைய சபையின் முக்கியத்துவத்தைக் குறித்து தெரிந்து கொள்ள உதவியாயிருக்கும். மற்றும் நீங்கள் இருக்கும் இடத்தில் சபையை வளர்க்க என்ன செய்ய வேண்டும் என்பதற்கும் உதவும். இந்த சிந்தையோடு தொடர்ந்து படிக்கும் பாடங்களுடன் நீங்கள் இருப்பீர்கள் என நம்புகிறேன்.

நாம் மனிதனைக் குறித்தான தேவனுடைய திட்டத்தைப் படிக்கப் போகின்றோம். நாம் ஒவ்வொருவரும் தேவன் உண்டென்பதையும் நாம் அவருடைய படைப்பு என்பதையும் மட்டும் தெரிந்திருந்தால் அது போதாது. அவர் மனிதனுக்காக ஒரு திட்டம் வைத்திருக்கிறார் என்பதையும் நாம் அறிய வேண்டும்.

தேவன் எப்பொழுதும் ஜீவித்துக் கொண்டு இருக்கிறார், இப்பொழுதும் ஜீவிக்கிறார், எப்பொழுதும் ஜீவிப்பார். அவர் மாம்சமாகவோ, உலகபிரகாரமாகவோ இல்லை; அவர் ஆவியாய் இருக்கிறார். இது யோவானின் கூற்று. (யோவான் 4 : 24). “எல்லோருக்கும் ஒரே தேவனும், பிதாவும் உண்டு. அவர் எல்லார் மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர் (எபே. 4 : 6). அவர் வானத்தையும் பூமியையும் மாத்திரம் உண்டாக்கவில்லை, அதின் நிறைவும் அவருடையது (ஆதி. 1 : 1). நாம் ஆதியாகம நூலின் முதல் மூன்று அதிகாரங்களை தொடர்ந்து வாசிப்போம் என்றால், அதில், மனிதனை தம் சாயலில் படைத்ததின் மூலம், எல்லா படைப்புக்கும் கிரீடமாக அவனை உண்டாக்கினார் (ஆதி 1 : 26, 27, ஆதி 2 : 7)

மனிதன் தற்செயலாக இந்த உலகத்தில் வரவில்லை. அவன் இங்கு இடத்தை நிரப்பவோ, ஒரு காரணமும் இன்றி இங்கு சுற்றித் திரியவோ வரவில்லை. இந்த உலக சிற்றின்பத்தை நாடுவதை விட மேலானவைகளை நாடுவதே மனிதனின் வாழ்க்கை. அவன் தம்மை படைத்தவரை கனம் பண்ணவே இங்கு வைக்கப்பட்டான். சங்கீதக்காரன்

இப்படியாக எழுதுகிறான். "கர்த்தரே தேவனென்று அறியுங்கள்; நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார் நாம் அவர் ஜனங்களும், அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம். அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்". (சங். 100 : 3, 4).

மனிதனை படைப்பதற்கு முன்பே, தேவன் மனிதனுக்கு என்று ஒரு திட்டம் வைத்திருந்தார். நீதிமான் இரட்சிக்கப்பட வேண்டுமென்றும், பாவிகள் ஆக்கினை தீர்ப்பு அடைய வேண்டுமென்றும் அவர் முன்பே தீர்மானித்தார் அல்லது முடிவுசெய்தார் அல்லது நியமித்தார். எபேசு பட்டணத்தில் உள்ள கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது பவுல் இவ்வாறு எழுதுகிறார். (எபே 1 : 4 – 6). தேவன் நீதிமானை இரட்சிக்கவும், பாவியை தண்டிக்கவும் நியமித்தாலும், நாம் இவ்விரண்டில் எந்த கூட்டத்தில் சேருவோம் என்பதை நாமே முடிவு செய்யும் சுதந்திரத்தை நமக்கு தந்திருக்கிறார்.

ஒருவன் இம்மையிலும், மறுமையிலும் இரட்சிக்கப்பட நீதிமான்களின் கூட்டத்தில் சேருவேன் என்று முடிவு செய்தால் அவன் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து விசுவாசித்து, மனந்திரும்பி, திருமுழுக்கின் மூலம் கர்த்தருடைய சபையில் சேர்க்கப்பட வேண்டும் (மாற்கு 16 : 15, 16; அப் 2 : 47) இதைச் செய்யத் தவறினால், அவன் தண்டிக்கப்படும் கூட்டத்தில் சேர முடிவு செய்திருக்கிறான் என்று தான் பொருள்.

மனிதன் பாவமில்லாமல் இவ்வுலகத்தில் பிறந்தாலும்? அதாவது, கறைகளும், குறைகளும் இல்லாமல் பரிசுத்தமாகவும் இருந்தாலும், நன்மை, தீமை அறியும் பருவம் வரும் போது அவன் பாவியாகிறான். இந்த இடத்தில் தான் தேவன் அவன் செயலை நியாயம் தீர்க்கிறார். இதை இப்படியும் கூறலாம். அவன் பாவம் செய்கிறதினாலே, நியாயப்பிரமாணத்தை மீறுகிறான். அதினால் அவன் தண்டிக்கப் படுகிறான். நியாயப் பிரமாணத்தை மீறுகிறது பாவம். அதாவது தேவ சித்தத்தை செய்யாமல் இருப்பது அல்லது எதிராய் செய்வதும் (I யோ. 3 : 4) இப்படிப்பட்டவர்களைக் குறித்து பவுல் ரோமர் 3 : 23ல் "எல்லாரும் பாவம் செய்தார்கள்" என்கிறார்.

தேவன், மனிதன் பாவத்தில் இருக்கிறான் என்று கண்டு, அது அவனுக்கு நித்திய மரணத்தைத் தரும் என்றறிந்து (ரோமர் 3 : 23) அவனை இரட்சிக்கும்படி, தம் குமாரனை இவ்வுலகத்திற்கு அனுப்பினார். யோவான் இவ்வாறு எழுதுகிறார். "தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன்

கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்". (யோ. 3 : 16, 17)

மனிதன் தன் சுயநீதியினாலோ அல்லது மிருகங்களின் பலிகளாலோ இரட்சிக்கப்பட முடியாது (எபே. 2 : 8, 9; எபி. 10 : 4). ஆகவே தான் தேவன் தம் குமாரனை இவ்வுலகத்திற்கு அனுப்பினார். ரோமர் 5 : 8, 9ல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம். "நாம் பாவிகளா யிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்கள் ஆக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே." கிறிஸ்து தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களை சிலுவையில் சுமந்தார் என்று பேதுரு எழுதுகிறார் (I பேதுரு 2 : 24) கிறிஸ்து தாமே இப்படி கூறுகிறார். "நமது பாவமன்னிப்புக்கென்று அவருடைய இரத்தம் சிந்தப்படுகிறது. (மத். 26 : 28).

ஆனால், யாரோ ஒருவரின் மரணமும், இரத்தம் சிந்துதலும் நம் பாவத்தை நீக்குமா? அது முடியாது என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். ஆனால் கிறிஸ்து, தேவ குமாரன், தம்மிலே பாவமில்லாமல் இருப்பவர், அவரின் மரணமும், இரத்தம் சிந்துதலும் நம்முடைய பாவத்தில் இருந்து நம்மை இரட்சித்து மீட்கும்.

நம் மனதில் எழும் அடுத்த வினா என்னவென்றால், ஒருவனின் பாவத்தைக் கழுவி சுத்திகரிக்க கிறிஸ்துவின் இரத்தம் எவ்வாறு பயன்படுகிறது? வேத வசனத்தைக் கைக்கொண்டு கிறிஸ்துவின் கட்டளைகளின்படி நடந்தால் அவருடைய இரத்தம் பாவங்களைச் சுத்திகரிக்கும். கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்கு பின்பு, தம்முடைய சீஷர்களுக்கு இவ்வாறு கட்டளையை கொடுத்தனுப்பினார். "பின்பு, அவர் அவர்களை நோக்கி : நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்". (மாற்கு 16 : 15, 16). ஒருவன் கர்த்தரை விசுவாசித்து, பாவத்திலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமார னென்று அறிக்கையிட்டு, திருமுழுக்கு அதாவது தண்ணீருக்குள் அடக்கம் செய்யப்பட்டால், அந்தக் கீழ்ப்படிதலின் மூலமாக அவன்

கிறிஸ்துவின் இரத்தத்தை சென்றடைகிறான். அதனால் அவன் பாவம் மன்னிக்கப்படுகிறது. பவுல் எபே. 1 : 7ல் இவ்வாறு பறை சாற்றுகிறார். "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது". இங்கே அவர் கிறிஸ்துவின் இரத்தத்தைக் குறித்து நமக்கு எடுத்துரைக்கிறார்.

அப்போஸ்தலர் புத்தகத்தை நாம் வாசிக்கும்பொழுது அதில் பதினொரு மனமாற்ற சம்பவங்களைப் பார்க்கிறோம். ஒவ்வொருவரும் சுவிசேஷத்தினுடைய கட்டளைக்கு கீழ்ப்படிவதன் மூலம் இரட்சிக்கப் பட்டார்கள். மீண்டும் அவர்கள் சுத்திகரிக்கப்பட்டார்கள், மன்னிக்கப் பட்டார்கள், கிறிஸ்துவின் கட்டளைக்கு கீழ்ப்படிந்ததால் கிறிஸ்து வினாலும் அவருடைய இரத்தத்தினாலும் இரட்சிக்கப் பட்டார்கள். இதைத் தவிர வேறொரு இரட்சிப்பு இல்லை.

கர்த்தரின் கட்டளைக்கு கீழ்ப்படிந்தவர்களையும் இரட்சிக்கப்பட்ட வர்களையும் ஒரே சமயத்தில் கூட்டமாக சேர்த்து அவர்களை சபை என்று அழைத்தார்கள் . . . . இதுவே கிறிஸ்துவின் சபை. ஏறக்குறைய மூவாயிரம் பேர் எருசலேமில் அப்போஸ்தலருடைய உபதேசத்தைக் கேட்டு கர்த்தருக்கு கீழ்ப்படிந்தார்கள். மேலும் அப். 2 : 47ன்படி இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார். இந்த சபை ஒரு சாதாரண சபையோ அல்லது மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட, மற்ற பிரிவினை சபைகளைப் போலோ அல்ல. ஆனால் இது கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய கர்த்தரின் சபை. இந்த சபைக்காகவே அவர் மரித்தார். இந்த சபையே அவருடைய நாமத்தை தரித்ததாயிருக்கிறது. இந்த சபைக்காகவே அவர் மறுபடியும் திரும்ப வருவார். சபை ஒருவரையும் இரட்சிக்க முடியாது. ஆனால், கிறிஸ்துவே சபைக்கு இரட்சகராயிருக்கிறார். (எபே. 5 : 23). ஆகையால் ஒருவர் இரட்சிக்கப்பட்டு பரலோகம் செல்ல அந்த சபையின் அங்கத்தினராய் இருத்தல் அவசியம். (எபே. 5 : 25 – 27).

கிறிஸ்தவர்களும், கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்களு மாகிய இரட்சிக்கப்பட்ட மக்கள் தேவனைத் தொழுது கொண்டு, விசுவாசமுள்ள மெய்க் கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்ந்தால், பரலோகம் அவர்களுடைய நித்திய வீடாகும். இதுவே மனிதனுக்காக தேவன் ஏற்படுத்திய திட்டமாகும்.

தேவனுடைய வசனத்தில் சொல்லப்பட்ட கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினரும், கிறிஸ்தவர்களுமாய் நீங்கள் இருந்தால் நாங்கள்

உங்களை 'வாழ்த்துகிறோம். இல்லையென்றால் கர்த்தருக்கு கீழ்ப்படிதலைக் குறித்தும், வேதத்தின்படியான கிறிஸ்தவனாய் இருப்பதைக் குறித்தும் நீங்கள் ஆழமாய் சிந்திக்கும்படி உங்களை ஊக்குவிக்கிறோம்.

நாம் இந்த வேதபாடத்தை தொடர்ந்து கற்பதன் மூலம் கர்த்தருக்கு கீழ்ப்படிதலும், இருக்கும் இடத்திலேயே கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினராவதும் எவ்வளவு சுலபம் என்பதை தெரிந்து கொள்ளலாம். ஏற்கனவே அங்கு சபை மக்கள் இல்லாதிருந்தால், எப்படி அதனை தொடங்குவது என்பதை குறித்து நாங்கள் தகவல் கொடுக்கிறோம். தயவுசெய்து எங்களுடன் தொடர்ந்து இந்த பாடத்தை கற்றுக் கொள்ளுங்கள். உங்கள் வினாக்களுக்கு பதில் தேவையானால், வேத இலக்கியங்கள் கொடுக்க வேண்டுமானால், கர்த்தருக்கு கீழ்ப்படிய உங்களுக்கு உதவ வேண்டுமானால் எங்களுக்கு அதை தெரியப்படுத்துங்கள்.

J.C. சோட் — *சாமுவேல் சீசர் பிக்கின்ஸ்*


# அருமையான வாய்ப்பு

*பரிசுத்த ஆவியானவரின் பணி* **(170 பக்கங்கள்)** மற்றும் *புதிய ஏற்பாட்டு ஆராதனை* **(112 பக்கங்கள்)** ஆகிய நூல்கள் தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும் வேத மாணவர்களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

***புத்தகம் முற்றிலும் இலவசம்*** ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப்படும். அனுப்பவேண்டிய குறைந்தபட்ச தொகை ரூ. **15/-**

முகவரி : *தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்*
தபால் பெட்டி எண் 28, காங்கயம் - 638 701.

குறிப்பு : *தயவு செய்து மாத்திரம் அனுப்பவும். மணியார்டர் கூப்பனில் உங்கள் முகவரியை தெளிவாக எழுதவும்.*

# இயேசுவும், சிலுவையும்

உலகம் முழுவதுமுள்ள இழந்து போனவர்களின் இரட்சிப்பு இயேசுவையும் அவருடைய சிலுவையையும் மையமாகக் கொண்டுள்ளது. அவருடைய தியாகம் மனிதனை கடந்த 1900 ஆண்டுகளுக்கும் மேலாக, தேவன் பக்கமாக இழுத்து வந்துள்ளது. சிலுவையிலறைப்படுவதற்கு முன், கிறிஸ்து அவமான முறையில் நடத்தப்பட்டார். உலகரட்சகர் இயேசு தன்னுடைய விரோதிகளால் சவுக்கால் அடிக்கப்பட்டு, போர்ச் சேவகரால் துன்புறுத்தப்பட்டு பரிகசிக்கப்பட்டார். எதிரிகள் அவர் மீது உமிழ்ந்து, அதன்பிறகு சிலுவையில் அறைய அவர் கொண்டு போகப்பட்டார். சிலுவை மரணத்தை மத்தேயு இவ்விதமாகக் குறிப்பிட்டுள்ளார். "அவரைச் சிலுவையில் அறைந்த பின்பு அவர்கள் சீட்டு போட்டு அவருடைய வஸ்திரங்களைப் பங்கிட்டுக் கொண்டார்கள், . . . அவர்கள் உட்கார்ந்து அவரை காவல் காத்துக் கொண்டிருந்தார்கள் (மத் 27 : 35 – 36) சில மண்ணி நேர பாடுகளுக்குப் பிறகு இயேசு கொல்கதாவில் தன் உயிரை விட்டார்.

**சிலுவை - ஒரு அடையாளம் :**

கிறிஸ்துவத்தின் பேருண்மைகளை சிலுவை அடையாளப்படுத்துகிறது. முதலாவது இந்த அடையாளம் பாவத்தின் ஆழத்தை சுட்டிக் காட்டுகிறது. பாவத்தின் விளைவை சிதைத்து போன குடும்பங்களிலும், பயங்கர பகையுணர்விலும் ஒருவருடைய உரிமையை மற்றவர் பரித்துக் கொள்கிற கொடூரச் செயல்களிலும் நாம் காணலாம். ஆனால், இயேசுவின் சிலுவை மரணம் பாவத்தை அதன் உண்மைத் தன்மையோடு மனிதனுக்குக் காட்டும் தேவனின் மாபெரும் முயற்சியாகும். தேவகுமாரனின் மரணத்திற்கு பாவம்தான் பொறுப்பாகும். ஒரு சமயம் நான், மறைந்த "லியோ போல்ஸ்" என்பவர் "இயேசுவை சிலுவையிலறைந்த பாவம்" என்ற தலைப்பில் பிரசங்கிப்பதைக் கேட்டேன். அவர் அறியாமையான பாவம் என்பதிலிருந்து தொடங்கி, விரோதம், பொறாமை, திருட்டு, பொய், பண ஆசை, ஒழுக்கக் கேடு ஆகிய பல பாவங்கள் பற்றிப் பேசினார். அந்தப் பிரசங்கத்தில் போல்ஸ் அவர்கள் நீதி தவறுதலைக் குறித்துப் பேசும்போது, பிலாத்தைக் குறிப்பிட்டார்" தான் என்ன செய்ய வேண்டுமென்பது தெரிந்தும் அதை செய்ய முடியாத அளவு பெலவீனமாயிருந்தான்" என்று அவன் உறுதியாகச்

செயல்பட்டிருக்கலாம். ஆனால் தனக்கு கனத்தைக் கொடுக்கும் கொள்கைகளை காற்றில் பறக்க விட்டுவிட்டு ஒழுக்கரீதியில் ஒரு கோழையாக நடந்து கொண்டான்''.

**இரக்கத்தின் அகலம் :**

தேவனுடைய அளவு கடந்த இரக்கத்திற்கு கிறிஸ்துவின் சிலுவை ஒரு அடையாளம் இயேசு கிறிஸ்து சிந்தின இரத்தத்தின் வல்லமை எல்லோருக்கும் கிடைக்கிறது. தீமை தண்டிக்கப்பட வேண்டுமென நீதி துடிக்கிறது, ஆனால் கிறிஸ்துவின் மரணத்தின் மூலமாக தேவன் மனிதனுக்கு இரக்கத்தை நீட்டிக் கொடுத்துள்ளார். ஒரு பாவி தன்னுடைய பாவத்திற்கு தண்டனையைப் பெற்றுக் கொள்வதற்கு பதிலாக. அவன் பாவ மன்னிப்பை பெற்றுக் கொள்ள முடியும்.

கீழே சொல்லப்படும் சம்பவம், மேதியர், பெர்சியராலே கொடுக்கப்பட்டது. மேதியர் பெர்சியர் இவர்களின் சட்டங்கள் மாற்றத்தக்கதல்ல. மாத்திரமல்ல அவைகளின் தண்டனைக்குத் தப்பித்துக் கொள்ளவும் முடியாது. அச்சட்டத்தில் கண்ணுக்குக் கண்ணும் பல்லுக்கு பல்லும் கேட்கப்படும் ஒரு சமயம் ஒரு இளைஞன் தன்னைச் சேர்ந்த ஒருவனின் கண்களைக் கெடுத்துப்போட்டான். அவனுடைய குற்றத்திற்குத் தண்டனையாக, அந்த இளைஞனின் கண்கள் பிடுங்கப்பட வேண்டுமென சட்டம் சொல்லிற்று.

அந்த இளம் குற்றவாளி. விசாரணைக்காக நீதிபதியின் முன்னால் கொண்டு வரப்பட்டான். இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவனின் சொந்தத் தகப்பன் நீதிபதியாக இருக்க நேர்ந்துவிட்டது. அங்கே, நீதி மற்றும் இரக்கம் இவ்விரண்டின் முரண்பாடான அழுகையின் சத்தம் நீதிபதியின் செவிகளில் ஒலித்தது. நீதிபதி மகனை நேசித்தான் கூடவே நாட்டின் சட்டத்தையும் மதித்தான் தவறு செய்தவன் கண்டிப்பாகத் தண்டிக்கப்பட வேண்டும். அன்பும் தனது இரக்கத்தின் வழியைக் கண்டுபிடித்தாக வேண்டும். அதே நேரத்தில் நீண்ட சிந்தனைக்குப் பிறகு நீதிபதி தன் மகனைப்பார்த்து இவ்விதம் சொன்னான், உன்னுடைய நீதிபதி என்ற முறையில், நீ அழித்த இரண்டு கண்களுக்குப் பதிலாக உனது இரண்டு கண்கள் கொடுக்கப்பட வேண்டும் என்ற சட்டத்தின் தண்டனையை நான் விதித்தாக வேண்டும். சட்டம் சொல்வதற்குக் குறைவாக நான் எதையும் செய்ய முடியாது. ஆனால் உனது தகப்பன் என்ற முறையில் நீதியை நிறைவேற்றுவதற்கு உதவும் பொருட்டு என்னுடைய கண்களில் ஒன்றைத் தருகிறேன்'' என்று இந்த வகையான இரக்கத்தின் பாடத்தைக் குறித்து பவுல் சொல்லியுள்ளார். "நாம்

பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார் (ரோமர் 5 : 8). சிலுவை மனிதனுக்கான தேவ அன்பையும், இரக்கத்தையும் வெளிப்படுத்துகிறது.

**இரட்சிப்பின் வல்லமை :**

மனிதனுடைய இரட்சிப்பின் வல்லமையை சிலுவை அடையாளப் படுத்துகிறது "சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர் களுக்குப் பைத்தியமாயிருக்கிறது. இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது. (1 கொரி 1 : 18) கிறிஸ்துவின் சிலுவையின் மூலமாக மனிதன் தேவனிடம் ஒப்புரவாகிறான்.

விவாகரத்தைப் பெற்றுக் கொண்ட ஒரு கணவனும் மனைவியும் மரிக்கும் தருவாயிலிருந்து தங்களது குழந்தையின் படுக்கையின் இருபுறமும் நின்றிருந்ததாக ஒரு உண்மைச் சம்பவம் உண்டு. அந்தக் குழந்தை ஒரு கையினால் தனது தந்தையின் கரத்தைப் பற்றியிருந்தது, இன்னொரு கரத்தால், தாயின் கைகளைக் கெட்டியாகப் பிடித்திருந்தது. இந்நிலையில் அந்தக் குழந்தையின் உயிர் பிரிந்தது. ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்குத் திரும்பியது. பரஸ்பர அன்பில் ஒன்றாக்கப்பட்டு பிஞ்சுக் கரங்களால் கிட்டிச் சேர்க்கப்பட்ட கணவனும் மனைவியும் ஒன்று சேர்க்கப்பட்டார்களென்றும், ஒரு முறிந்து போன குடும்பம் ஒன்றானது என்றும் அது சொல்கிறது.

கொல்கதாவில் தேவகுமாரன், தனது ஒரு கரத்தை பரலோகத்திற்குள்ளாக நீட்டி தேவனை பிடித்துக் கொண்டார். மற்றொரு கரத்தை உலகத்திற்கு நேராக காட்டி மனிதனின் இருதயத்தை தொட்டுள்ளார். அதன் மூலம், சிலுவையில் தொங்கின கிறிஸ்து, மனிதன் தேவனோடு ஒப்புரவாக வேண்டுமெனக் கேட்கிறார். நமது இரட்சகர் மரித்த சிலுவை மரம் சாதாரணமானது என்று எண்ண வேண்டாம். அது ஒரு மகத்தான பாடத்தைக் கற்பிக்கிறது. யோவான் அப்போஸ்தலன் தனது நூலில் சிலுவையின் மேன்மையை ஒரு வசனத்தில் திரட்டிக் கொடுத்துள்ளார். "தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் அவரைத் நித்திய ஜீவனை அடையும்படிக்கு தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் (யோவா 3 : 16).

# சங்கீதம் 23

## "கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார்"

முன்னுரை : தேவனை முழுமையாக நம்புகிற ஒரு மனிதனைப் பற்றிய முழுமையான விளக்கமே, சங். 23 ஆகும். தாவீதுக்கும் தேவனுக்குமிடையே காணப்படும் நெருங்கிய உறவு முறையானது ஆடாகவும் மேய்ப்பனாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளது.

தேவனுடைய அன்பு மகத்தானது. மனுஷன் அந்த அன்புக்கு பாத்திரவானாக தம்மை தகுதிப்படுத்திக் கொண்டு வாழ்நாள் முழுவதும் ஜீவிப்பது எப்படி என்று படம் பிடித்து காட்டப்படுகிறது.

"மாக்லேரன்" (Maclaren) என்ற அறிஞர் சொல்லுகிறார். "இந்த உலகம் எத்தனையோ பெரிய புத்தகங்களை அறிவு களஞ்சியங்கள் என்று சேமித்து பாதுகாப்பாக வைப்பதை பார்க்கிலும், இந்த சிறிய குட்டி சங்கீதத்தை அறிவு களஞ்சியங்களில் சேமித்து வைக்கலாம்".

## இஸ்ரவேலின் மேய்ப்பர்

தேவனே! இஸ்ரவேலின் மகத்தான மேய்ப்பர். இந்த கருத்து பழைய ஏற்பாட்டின் அநேக பகுதிகளில், தேவனுக்கும் தமது மக்களுக்குமிடையே காணப்படும் உறவு முறையை ஒப்புமைப்படுத்தி சொல்லப்பட்டிருக்கிறது. (சங் 74 : 1; 77 : 20; 78 : 52; ஏசா 40 : 11; எசேக் 34 : 12–14) தேவன், தமது மக்களை முழுமையாக நேசிப்பது மட்டுமல்ல, முழுமையாக அவர்களை நம்புகிறார்.

மேய்ப்பர் என்றால் ஆவிக்குரிய கருத்தில், வழிகாட்டுபவர், பாதுகாப்பவர், போஷிப்பவர், பாதை காட்டுபவர், மந்தையை நடத்துபவர்.

அந்த மேய்ப்பர் காட்டும் அக்கறை ஆடுகளுக்கு போதுமானதாயிருக்கும். இஸ்ரவேலின் இனிய பாடகர் தாவீது (II சாமு 23 : 1) சொல்லுகிறார். நான் தாழ்ச்சியடையமாட்டேன் அல்லது எனக்கு ஒரு குறைவுமில்லை.

'மேத்யு ஹென்றி' குறிப்பிடும் போது, "எனக்குத் தேவையானது யாவற்றையும் அவர் எனக்கு கொடுக்கும் போது, நான் விரும்பினது எல்லாம் எனக்கு கிடைக்கும் போது, எது எனக்கு ஏற்றது எது எனக்கு ஏற்றதல்ல என்று அவர் அறிந்து தேவையான சமயங்களில் எனக்கு கொடுக்கும்போது நான் ஏன் தாழ்ச்சியடைய வேண்டும்?

புதிய ஏற்பாடு மற்றொரு மேய்ப்பரை பற்றி சொல்லுகிறது. இயேசு சொன்னார் "நானே! நல்ல மேய்ப்பன், நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளுக்காக ஜீவனை கொடுப்பான்" (யோவான் 10 : 11).

**மேய்ப்பரின் அர்ப்பணிப்பு**

இஸ்ரவேலின் மேய்ப்பர்கள், தங்கள் ஆடுகளை போதுமான புல்லுள்ள இடங்களிலும் அமர்ந்த தண்ணீர்களண்டையிலும் வழி நடத்துவார்கள்.

**வசனம் 2ல்** தேவனுடைய விசுவாசமுள்ள ஆடுகளுக்கு ஏராளமான ஆசீர்வாதங்களுண்டு (மத்.6: 33; எபேசி 1 : 3). சரீரப்பிரகாரமான வாக்குத்தத்தங்களுமுண்டு ஆவிக்குரிய ஆசீர்வாதங் களுமுண்டு.

**வசனம் 3 "அவர் என் ஆத்துமாவை தேற்றுகிறார்"**

ஒவ்வொரு மனுஷனுக்கும் அவனுடைய பொருளாதாரச் சூழ்நிலைகளைப் பார்க்கிலும் ஆவிக்குரிய சூழ்நிலையே முக்கியம்.

ஒவ்வொரு மனிதனும் பாவத்தில் தம்முடைய ஆத்துமாவை இழந்து போனவனாயிருக்கிறான். அந்த இழந்த ஆத்துமாவை திரும்ப மீட்டுக் கொள்வது என்பது தேவனால்தான் முடியும். (ரோமர் 3 : 23; ரோமர் 6 : 23; ஏசா 59 : 1, 2; அப். 22 : 16).

இந்த சத்தியத்தை பொறுத்தவரை தாவீதுக்கு நிச்சயமான சுய அனுபவம் கூடுதலாக உண்டு (சங். 51). புதிய ஏற்பாட்டு சாராம்சமே "தேவனுடன் ஒப்புரவாகுதல்" (II கொரி 5 : 1. 21). "நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" (யோவான் 10 : 10).

**"நீதியின் பாதைகளில் என்னை நடத்துவது"**

சங் 119 : 105 " என் கால்களுக்கு தீபம், பாதைக்கு வெளிச்சம்" தேவனுடைய வசனமே. எந்த நற்கிரியையுஞ் செய்ய தகுதியுள்ள வனாக்கும் (II தீமோ 3 : 16, 17).

**வசனம் 4** இருள், துஷ்ட மிருகங்களும், தீயவரும், திருடரும் நடமாடும் நேரம். தாவீது (I சாமு 17 : 34) கரடிக்கும், சிங்கத்துக்கும் ஆடுகளை நீங்கலாக்கி வனாந்தரத்தில் காத்து கொண்டார். இப்படிப்பட்ட ஆடுகள், பயமின்றி, கவலையின்றி இளைப்பாறும். காரணம் தங்களை பாதுகாக்கும் நல்ல மேய்ப்பர் தங்களுக்கு உண்டு என்று அந்த ஆடுகள் உணர்ந்து கொள்ளும்.

பவுல், தம்மை பயமுறுத்தக் கூடிய பயங்கரச் சூழ்நிலையிலும் (II கொரி 11 : 23) அவர் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கிறோம் என்கிறார்.

**வசனம் 5** நிறைவான ஆசீர்வாதங்களை இங்கு குறிப்பிடுகிறார். சரீர ஆத்தும தேவைகள் யாவும் நிறைவாய் சந்திக்கப்படுகிறது என்கிறார்.

சரீர பசிக்கு ஆகாரமும் தாகத்துக்கு தண்ணீரும் கொடுப்பதைப் போல, ஆவிக்குரிய பசிக்கு போஜனமும் ஆவிக்குரிய தாகத்துக்கு பானமும் கொடுப்பவர் தேவன் (மத் 5 : 6)

**தேவ மக்களுக்கு எதிரிகள் அதிகம்** (எம்பசி 6 : 11, 12) "சத்துருக்களுக்கு முன்பாக" பந்தியை ஆயத்தப்படுத்துவார் தேவன். இன்றைக்கும் மேய்ப்பர்கள் ஒரு சிறிய பாட்டிலில் எண்ணெயை எடுத்து செல்லுவார்கள். ஆடுகளுக்கு ஏதாவது காயங்கள் ஏற்பட்டால் அந்த காயங்களை எண்ணெய் பூசி சுகப்படுத்த உதவுவார்கள்.

இந்த வாழ்க்கையில் நமக்கு யுத்தம் நியமிக்கப்பட்டுள்ளது. இந்த சரீர ஆவிக்குரிய யுத்தத்தில் நம்முடனிருந்து நம்மை பாதுகாத்து, நம்மை நடத்தி, வெற்றி பாதையில் வழி நடத்துவார் தேவன்.

**மரண இருளின் பள்ளதாக்கு**

மரணம் அச்சுறுத்தும் காரணம் நாம் மனித ஜீவிகள். மரணத்தை பற்றி நமக்கு ஒன்றுமே தெரியாததினால் நாம் பயப்படுகிறோம்.

இந்த வசனத்தின் மூலம் தேவன் நல்ல மேய்ப்பர். மரணத்தின் பயத்திலிருந்தும் அத்துடன் தொடர்புடைய அழிவுகளிலிருந்து பரலோகத்தின் தேவனே நம்மை பயமில்லாமல் நடத்த முடியும்.

இயேசுவோடு நீ ஒப்புரவாகும் போது, மரணம் உன்னை சேதப்படுத்தாது (ரோமர் 6 : 4; கலா 3 : 27) மரண பரியந்தம் இந்த உடன்பாட்டில் உண்மையாக இருந்தால் (வெளி 2 : 10) அவன் நித்திய மரணத்தினால் பாதிக்கப்படுவதில்லை (யோவான் 11 : 25, 26)

நம்முடைய ஜீவியத்தின் இருண்ட பகுதிகளில், அவர் நம்மை பாதுகாக்கின்றார். "உன்னை கைவிடுவதில்லை, உன்னை விட்டு விலகுவதில்லை" (எபி 13 : 5) என்று வாக்களித்தவர் நம் தேவன்.

**"கோலும் தடியும்"** மேய்ப்பர்கள் இந்த இரண்டையும் தங்களுடன் எடுத்துக் கொண்டு போவார்கள். ஒன்று ஆடுகளை வழி நடத்தவும், மற்றொன்று ஆடுகளை பாதுகாக்கவும்.

**முடிவாக**

**வசனம் 6** "ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் தொடரும்"

விசுவாசமுள்ள கிறிஸ்தவனுடைய ஜீவியத்தில், இந்த நன்மையும், கிருபையும் எப்பொழுதும் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. (ரோமர் 5:1–11 ; எபேசி 2 : 1–10 ; II தீமோ 4 : 1–8)

சகல தேவ ஜனமும், தேவனே, மகத்தான மேய்ப்பர் என்று அறிவிப்பார்கள்.

**சகோ. வே. தானியேல் துரைராஜன்.**

# ஆவியின் கனி

## தயவு

மனுஷன் தன் வாழ்க்கையில் நன்மையே நடைபெற வேண்டும் என்று எதிர்பார்ப்பது இயல்பு. பிறனிடத்தில் நன்மையானவற்றை எதிர்பார்க்கின்றவன் அந்த எண்ணம் தன்னிடத்திலும் காணப்பட வேண்டும் என்று விரும்பினால் உலகத்தில் தீமை என்பதற்கே இடமின்றி போகும். சமுதாயத்தில் நிலவிவரும் தீமையான செயல்களைக் காணும்போது நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணம் பெரும்பாலானவர்களிடம் இல்லை என்பது தெளிவு. (சங் 14 : 3)ல் "எல்லாரும் வழிவிலகி ஏகமாய் கெட்டுப் போனார்கள்; நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை" என்று தாவீது கூறுகிறார். ஒருவன் பிறனிடத்தில் ஒரு உதவியை நாடும்போது **"தயவு செய்து"** என்ற வார்த்தையை பயன்படுத்துவது வழக்கம். இதன் பொருள் "நன்மை செய்ய மனுஷன் கொண்டிருக்கும் ஆசையே" என்று (நீதி 19 : 22)ல் சாலொமோன் கூறுகிறார். மேற்சொல்லப்பட்டுள்ள பொருள் குறித்து வேதாகமத்தில் உள்ள ஒரு சம்பவத்தை பார்க்கலாமா?

யூதா தேசத்தை சேர்ந்த நகோமி என்பவள் தன் புருஷனுடனும், இரண்டு குமாரருடனும் மோவாப் தேசத்தில் குடியேறினாள். அங்கே அவளின் இரண்டு குமாரருக்கும் மோவாபியரில் பெண் கொண்டாள். அங்கே அவர்கள் இருந்த போது, நகோமியின் புருஷனும் இரண்டு குமாரரும் இறந்து போனார்கள். தனிமையான நகோமி தனது சொந்த தேசத்துக்கு திரும்பிச் சென்றபோது அவளுடைய மருமக்களில் ரூத் என்பவள் அவளுடன் யூதா தேசத்திற்கு வந்து அவளுடன் இருந்தாள். இவர்களின் உணவிற்காக ரூத் நகோமியைப் பார்த்து நான் வயல்வெளிக்குப் போய் யாருடைய கண்களில் எனக்கு தயை கிடைக்குமோ, அவர் பிறகே கதிர்களைப் பொறுக்கி கொண்டு வருகிறேன் என்று கூறி போவாஸ் என்பவனின் வயலுக்கு சென்றாள். ரூத் கோதுமை கதிர்களை பொறுக்கி கொண்டிருப்பதை போவாஸ் பார்த்து அவளைக் குறித்து விசாரித்து, அவள் கதிர்களை பொறுக்கிக் கொள்ளவும், தன் ஊழியக்கார பெண்களோடு இருக்கவும், அவளுக்கு தாகம் எடுத்தால் வேலைகாரர் கொண்டு வரும் தண்ணீரில் குடிக்கவும் சொன்னான். அப்பொழுது அவள் அவனை வணங்கி நான் அந்நிய

தேசத்தாளாயிருக்க நீர் என்னை விசாரிக்கும்படி எனக்கு எதினாலே உம்முடைய கண்களில் தயை கிடைத்தது என்றாள். அதற்குப் போவாஸ் பிரதியுத்தரமாக, உன் புருஷன் மரணமடைந்த பின்பு நீ உன் மாமியாருக்காகச் செய்ததும், நீ உன் தகப்பனையும் உன் தாயையும், உன் ஜென்ம தேசத்தையும் விட்டு முன்னே நீ அறியாத ஜனங்களிடத்தில் வந்ததும் எனக்கு தெரிவிக்கப்பட்டது என்றான். இவர்கள் இருவரும் பிறருக்கு நன்மை செய்யும் ஆசையுடையவர்களாய் தங்களின் தயவை காண்பித்தார்கள். (ரூத் 1-5 அதி) இவர்களை போன்று நற்புத்தி உடையவர்களுக்கு தயை உண்டாகும் என்று சாலொமோன் கூறுகிறார் (நீதி 13 : 15) இவ்விதமாக நன்மை செய்யும் மனமுள்ளோர்க்கு கொடூரமான மனுஷனுடைய கண்களிலும் கர்த்தர் தயை கிடைக்க பண்ணுவார். வேதத்தில் சொல்லப்பட்டுள்ள மற்றொரு சம்பவத்தையும் பார்ப்போம்.

யோசேப்பு என்னும் வாலிபன் தன் சகோதரரைக் காட்டிலும் அதிகமாக தன் தகப்பனால் நேசிக்கப்படுவதை ஏற்றுக் கொள்ள மனமற்ற தனது சகோதரர்களை சந்தித்து நலம் விசாரித்து தனது தகப்பனுக்கு அறிவிப்பதற்காக சென்று அவர்களை சந்தித்தபோது அவனைப் பிடித்து அவ்வழியே போன வியாபாரிகளிடம் விற்றுப் போட்டார்கள். அவன் எகிப்துக்கு கொண்டு போகப்பட்டு அந்த வியாபாரிகளால் ஒரு அதிபதிக்கு விலைக்கு விற்று போடப்பட்டான். கர்த்தர் அவனோடு இருந்து அந்த எஜமானன் கண்களில் தயை கிடைக்கப்பண்ணி அவனை அந்த வீட்டு விசாரணைக்காரனாக ஏற்படுத்தினார். எஜமானனின் மனைவி தன் புருஷனுக்கு விரோதமாக யோசேப்போடே நடக்க மனதாயிருந்த போது, அவன் தன் எஜமானனுக்கு விரோதமாக தீமை செய்ய மனமில்லாதவனாய் அவளிடத்திலிருந்து தப்பித்து ஓடிப் போனான். அந்த எஜமானனின் மனைவியோ யோசேப்பின் மீது பொய்யாய் பழி சுமத்தினதால் அவனை சிறைச்சாலையில் அடைத்தார்கள். கர்த்தர் அவனுக்கு சிறைச்சாலை தலைவனுடைய கண்களில் தயவு கிடைக்கும்படி செய்தார் (ஆதி 39 : 21) கர்த்தர் அவனை எகிப்த்து தேசம் முழுமைக்கும் அதிகாரியாக உயர்த்தினார். (ஆதி 41 : 41). சாலொமோன் கூறுகிறார் "நல்லவன் கர்த்தரிடத்தில் தயை பெறுவான்; துர்ச்சிந்தனைகளுள்ள மனுஷனை அவர் ஆக்கினைக்குட்படுத்துவார்" என்று. ரூத்தை போன்றும், யோசேப்பை போன்றும் நல்லவர்களாக வாழ்ந்து தயையுள்ளவர்களாக இருப்போமானால் நமக்கும் கர்த்தரிடத்தில் தயை கிடைக்கும். ஒவ்வொரு மனுஷனும் தனது பாவ வாழ்க்கையிலிருந்து மனந்திரும்பி நல்லவனாய் வாழவேண்டும் என்பது

தேவனுடைய சித்தமாய் இருக்கிறது. ஏசாயா தீர்க்கதரிசி கூறுகிறார். "துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன்; அவர் அவன்மேல் மனதுருகுவார்; நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பகடவன்; அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார்" என்று. (எசா. 55 : 7). ஆனால் பாவமன்னிப்பை பெற மனிதனுக்கோ மனமில்லை. இன்று அநேகர் வேத வசனங்களை வாசிக்கின்றார்கள். அதை நேசிக்கின்றார்கள் ஆனால் அவைகளுக்கு கீழ்ப்படிய மனமில்லை. அன்பு வாசகரே, உங்களுடைய நிலை என்ன? "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட வேண்டும்" (1 தீமோ 2 : 4) ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் . . . (மாற் 16 : 16) என்பது இயேசு காண்பித்துள்ள வழி. இதை ஏற்றுக்கொண்டு கீழ்ப்படிய உங்களுக்கு மனமுண்டா? இவ்விதமான நன்மையான காரியத்தையே தேடுங்கள். சாலொமோன் கூறுகிறார் "நன்மையை ஜாக்கிரதையுடன் தேடுகிறவன் தயை பெறுவான்; தீமையைத் தேடுகிறவனுக்கோ தீமையே வரும் என்று (நீதி 11 : 27) மேலும் சாலமோன் மூலம் தேவன் வெளிப்படுத்தினது, "என் மகனே என் போதகத்தை (வேத வசனத்தை) மறவாதே; உன் இருதயம் என் கட்டளைகளைக் காக்கக் கடவது. அவைகள் உனக்கு நீடித்த நாட்களையும், தீர்க்காயுசையும், சமாதானத்தையும் பெருகப்பண்ணும். கிருபையும் சத்தியமும் உன்னை விட்டு விலகாதிருப்பதாக. நீ அவைகளை உன் கழுத்திலே பூண்டு அவைகளை உன் இருதயமாகிய பலகையில் எழுதிக் கொள். அதினால் தேவனுடைய் பார்வையிலும், மனுஷருடைய பார்வையிலும் தயையும் நற்புத்தியும் பெறுவாய்" (நீதி 3 : 1–4).

"தேவ தயவு உங்களோடிருப்பதாக"

**சகோ. ஹென்றி மோகன்**
**நீலகிரி.**

# நன்றி

*கடந்த 9-2-98 அன்று காங்கயத்தில் நடைபெற்ற "உலக வீடியோ வேதாகமக் கல்லூரி"யின் ஆண்டு விழாவிலும் "ஆத்தும ஆதாயப் பிரசங்கங்கள்" என்ற நூல் வெளியீட்டுக் கூட்டத்திலும்" கலந்து கொண்ட ஊழியர்களுக்கும், மற்றவர்களுக்கும் நன்றி கூறுகிறேன்.*

**ஆசிரியர்**

# தேவனுக்கு கீழ்ப்படிந்தவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள்

**ஏனோக்கு :** ஏனோக்கு தேவனோடே சஞ்சரிக்கையில் காணப் படாமற் போனான். தேவன் அவனை எடுத்துக் கொண்டார். அவன் மரணத்தைக் காணவில்லை. தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்த வர்கள் மட்டுமே தேவனோடு சஞ்சரிக்கமுடியும்.

**நோவா :** கர்த்தர் சொல்லுகிறார் நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான். நோவா தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தான் நோவா தனக்கு கர்த்தர் கட்டளையிட்டபடி பேழையைச் செய்தான். கூட்டவும் இல்லை குறைக்கவும் இல்லை. தேவன் தனக்கு கட்டளையிட்டபடி நோவா ஆணும், பெண்ணுமாக மிருகங்களை பேழைக்குள் கொண்டு வந்தான். நோவா உத்தமனும், தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தவனும் ஆனதால் ஜலப்பிரளயத்திலிருந்து அவனும் அவன் குடும்பமும் அழிவிலிருந்து காக்கப்பட்டார்கள். தேவனும் அவர்களை ஆசீர்வதித்து நீங்கள் மருகிப் பலுருகி பூமியை நிரப்புங்கள் என்றார்.

**ஆபிரகாம் :** கர்த்தர் ஆபிரகாமை நோக்கி நீ உன் தேசத்தையும் உன் இனத்தாரையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டு புறப்பட்டு நான் உனக்கு காண்பிக்கும் தேசத்துக்குபோ என்றார். கர்த்தர் ஆபிரகாமுக்கு சொன்னபடியே அவன் புறப்பட்டுப் போனான். ஏன், எதற்கு என்று கேட்காமல் புறப்பட்டுப் போனான். கீழ்ப்படிந்தான். கானான் தேசத்தில் குடியிருந்தான். கர்த்தர் ஆபிரகாமை வெளியே அழைத்து நீ வானத்தை அண்ணாந்துபார் நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால் அவைகளை எண்ணு என்று சொல்லி பின்பு அவனை நோக்கி உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார். அவன் கர்த்தரை விசுவாசித்தான் அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார். ஆபிரகாம் 100 வயதான பொழுது ஈசாக்கைப் பெற்றான். தேவன் ஆபிரகாமை சோதிக்கும்படி ஆபிரகாமே என்றார் : அவன் இதோ அடியேன் என்றான் : அப்பொழுது தேவன் உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக் கொண்டு மோரியா தேசத்துக்குப் போய் அங்கே நான் உனக்கு குறிக்கும் மலைகள் ஒன்றின் மேல் அவனைத் தகன பலியாகப்

பலியிடு என்றார். ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து தன் கழுதையின் மேல் சேணங்கட்டி தன் வேலைக்காரரில் இரண்டு பேரையும் தன் குமாரன் ஈசாக்கையும் கூட்டிக் கொண்டு தகனவபலிக்குக் கட்டைகளையும் பிளந்து கொண்டு தேவன் குறித்த இடத்திற்குப் புறப்பட்டுப் போனான். மூன்று நாள் பிரயாணம் சென்று தூரத்திலே அந்த இடம் இருக்கக் கண்டான். வேலைக்காரரை அங்கே காத்திருங்கள் என்று சொல்லிவிட்டு ஆபிரகாம் தகனபலிக்கு கட்டைகளை எடுத்து தன் குமாரனாகிய ஈசாக்கின் மேல் வைத்து தன் கையிலே நெருப்பையும் கத்தியையும் எடுத்துக் கொண்டு இருவரும் போனார்கள்: போகும் பொழுது ஈசாக்கு, ஆபிரகாமை நோக்கி கட்டையும், நெருப்பும் இருக்கிறது தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே என்றான். ஆபிரகாம் தேவன் பார்த்துக் கொள்ளுவார் என்று சொன்னான். தேவன் ஆபிரகாமுக்கு சொல்லியிருந்த இடத்துக்கு இருவரும் வந்தார்கள். அங்கே ஆபிரகாம் ஒரு பலி பீடத்தை உண்டாக்கி, கட்டைகளை அடுக்கி தன் குமாரனாகிய ஈசாக்கை கட்டி அந்த பலிபீடத்தில் அடுக்கிய கட்டைகளின்மேல் அவனைக் கிடத்தினான். பின்பு ஆபிரகாம் தன் குமாரனை வெட்டும்படிக்குத் தன் கையை நீட்டிக் கத்தியை எடுத்தான். அப்பொழுது வானத்திலிருந்து கர்த்தருடைய தூதனானவர் பிள்ளையாண்டான் மேல் உன் கையைப் போடாதே அவனுக்கு ஒன்றும் செய்யாதே நீ அவனை உன் புத்திரனென்றும் உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக் கொடுத்தபடியினால் நீ தேவனுக்கு பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றார் : ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான். தேவன் தனக்கு வாக்களித்ததைச் செய்யவல்லவர் என்று விசுவாசித்தரன். விசுவாசத்தோடு கிரியையும் செய்தான். தேவன் சொன்ன எல்லா காரியத்திற்கும் மறுப்புச் சொல்லாமல் கீழ்ப்படிந்தான்.

மேலே கூறிய ஏனோக்கு, நோவா, ஆபிரகாம் யாவரும் மனிதர்கள் தான். நம்மைப்போல் இந்த மண்ணில் பிறந்து வளர்ந்து மனிதர்கள் தான். அவர்கள் தேவனுக்கு கீழ்ப்படிந்ததினால் ஆசீர் வதிக்கப்பட்டார்கள். இன்று நமக்கும் அந்த வாக்குத்தத்தம் இருக்கிறது தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியும் பொழுது, பிதாவாகிய தேவனும் அவருடைய குமாரனாகிய கிறிஸ்துவும் நமக்குள் வாசம் பண்ணு வார்கள். இதுபோன்ற சிலாக்கியம் யாருக்கு கிடைக்கும்? தேவனுக்கு கீழ்ப்படிந்தவர்களுக்கு மட்டுமே கிடைக்கும். தேவனுடைய ஆசீர்வாதத்தை விட இது மேன்மையும் மேலானதுமான சிலாக்கியம்.

**சகோ. ஞானம், மலேசியா.**

## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8.45 P.M. - 9.00 P.M., Thursdays, 9.00 - 9.15 P.M Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, and Thursdays, 2.00 P.M. -2.15 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Speaker, P.R.Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM** : Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K.Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/WO/ PP/5
Posted at Erode HPO on 20. **Feb 98**
**Feb 98** THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ்" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

**இயக்குநர்**
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
**த.பெ.எண். 27, காங்கயம்-638 701.**

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor S. Rajanayagam

From
THE EDITOR
THIRUMARAI AASAAN
Post Box No. 27,
KANGAYAM - 638 701.
Ph: 04257-20030